## முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 9 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| பெயர் | : | வெற்றிவீரன் | வயது | : | 61 |
|---|---|---|---|---|---|
| தந்தை/கணவர் பெயர் | : | பச்சமுத்து | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 09.11.2021-ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து தற்சமயம் ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 03.05.2014 ஆம் தேதி 12.30 மணியளவில் நான் அண்ணாமலை நகர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது உசுப்பூர் விஏஓ முத்துநாயகம் (பொறுப்பு) சிதம்பரம் டவுன் என்பவர் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 125/2014 பிரிவுகள் 3 , 4 Explosive Substance Act 1908, sec 25 (1)(b)(a) Indian Arms Act 1959, sec 3 of PPD Act 1992 and 120(B),427,307 IPC படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். வழக்கு கோப்பினை மேல்நடவடிக்கைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவர் எண்.1, சிதம்பரம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 10 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 மற்றும் 10 எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - முதல்தகவல்அறிக்கையில் சம்பவம் காலை 10.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் கொடுக்கப்பட்டது 12.30 மணியளவில். முதல்தகவல்அறிக்கை நீதித்துறை நடுவர் இல்லத்தில் கொடுத்தது அன்றைய தினமே இரவு 9.30 மணி. நீதிமன்றத்திற்கும் காவல்நிலையத்திற்கும் இடைபட்ட தூரம் ஒன்றரை கிமீ இருக்கும். நடந்துபோனால் அரை மணிநேரத்தில் போகலாம். மாரியப்பா நகரில் படித்தவர்கள் நிறைய பேர் வசிக்கிறார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டில் குடியிருந்தவர்களோ, பக்கத்தில் உள்ளவர்களோ புகார் கொடுக்கவில்லை. ஏனெனில் சம்பவத்தை பற்றி யாருக்கும் தெரியாது, சம்பவம் நடக்கவில்லை அதனால்தான் அவர்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விஏஒ காவல்நிலையத்திற்கு வரவழைத்து புகார் பெறப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக பதிவு செய்ததற்கு, வழக்கை ஜோடிப்பதற்காக ஏற்பட்டதே என்று சொன்னால் சரியல்ல.

12 வது எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை - மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.